முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.03.2023**, புதன்கிழமை

1. ஆற்றல்மிக்க ஞானவான்களை
அறத்தின் பலம் கொண்டுபடைத்து
மாற்றம் செய்ய வந்த தவசியே
மாதவராஜனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா அறுநான்கு திகதிபுந்திவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் **24** ம் நாள், **08.03.2023**, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் யானும்
3. யானுரைக்க உலக மக்களும்
உண்மைபட தரும பலமிக்க
ஞானவழி காட்டும் அரங்கனை
நம்பிவர மாற்றம் கிட்டும்
4. கிட்டவே கேட்ட வரமெல்லாம்
குவலயத்தில் அரங்கன் மூலம்
தட்டாது கிடைக்க இருக்க
தரணியில் அரங்கன் அவதாரமும்
5. அவதாரமுடன் நோக்கமும் பெருமையும்
அன்பர்கள் அறிந்து வருக
அவனியில் மாற்றம் எல்லாம்
அரங்கனால் நடந்தேறும் என்பேன்
6. என்கவே எங்கும் எதிலும்
எல்லாம் நியாயம் தருமமாக
நன்மைபட மாற்றம் கண்டு
ஞானிகள் வெளிப்பட உலகில்
7. உலகினில் பாதுகாப்பு பெருகும்
உண்மையானவர்கள் எல்லாம்
வலம்வந்து அரங்கன் குடிலில்
வாசம் செய்ய பக்குவம்கூடி
8. கூடியே ஞானவான்களாகவும்
குவலயம் மாற்றும் ஞானிகளாகவும்
நாடியே உலகினில் சக்தி கூடி
ஞானலோகம் படைத்துமே
9. படைத்துமே ஞானிகள் ஆட்சி
பலமான ஞான ஆட்சித்தருவர்
தடைகளை வென்று சிறக்க
தரணியில் மாற்றம் நடத்த

10. நடத்தவே ஞானிகள் பூசையும்
நல்ல அன்னதான சேவையும்
நடைமுறைப்படுத்த உலகினில்
ஞானபண்டிதன் துணையாக வந்து

11. வந்துமே காப்புப் பெருகும்
வல்லமைபட மாற்றம் நிகழும்
விந்தைபட ஞானஆட்சி மலரும்
வினவிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–